திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சூரியூர், இலந்தம்பட்டி, பூலன்குடி கிராமங்களில் 'ஹெவி அலாய் பெனிட்ரேட்டர்' திட்டத்தை அமைக்க பட்டா புன்செய் நிலங்களை கையகப்படுத்த ரூ. 12 இலட்சம் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள ரூ. 10 இலட்சம் முன்பணம், இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. இதே போல, செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், மணலியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக நிலத்தைக் கையகப்படுத்துவது தொடர்பான செலவுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட ரூ. 86,62,000 முன்பணம் இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்கள் எதிர்பாராத இனங்கள் ஆகும். 1986–87 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள வளர்ச்சிப் பணிகளுடன் இவற்றுக்கும் அனுமதி வழங்க வேண்டியிருந்தன. இத் திட்டங்களை அரசு சரியான முறையில் செயல்படுத்திட இயலும் வகையில், இந்தத் துணை மதிப்பீடுகளுக்கும், தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப் பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–00)

7. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1980–81 அளித்தல்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1980–81 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப் பட்ட நிதியொதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்களுக்கான மானியக் கோரிக்கைகளை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

1985–86 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்து, சில மானியங்களின்கீழ், அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட அதிகச் செலவாகியிருக்கிற இனங்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவு ஆனதற்கான காரணங்களை ஆய்வு செய்த பிறகு ஒவ்வொரு மானியத்தின்கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாக ஆகியுள்ள செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகளைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுமாறு பொதுக் கணக்குக் குழு

பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, 1980—81 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகள் இப்பொழுது அவையில் வைக்கப்படுகின்றன. 1980—81 ஆம் ஆண்டில் மொத்தத்தில் ஆன மிகைச் செலவு ரூ. 18.41 கோடியாகும். மேற்சொன்ன ஆண்டில் 'கடன் செலவுகள்', 'பாசனம்', 'பொதுப் பணிகள்—கட்டடங்கள்', 'மருத்துவம்' ஆகிய தலைப்புகளின்கீழ் பெருமளவில் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

'கடன் செலவுகள்' என்பதன்கீழ், மத்திய அரசுக்கு 1979—80 ஆம் ஆண்டிற்கு முந்தைய தொகுப்புக் கடன்களுக்கான வட்டி நிலுவைத் தொகைகளைச் செலுத்தவும், வைப்பீடுகள் குறித்த வட்டி நிலுவைத் தொகைகளைச் சரிக்கட்டுவதற்காக அதிக வட்டித் தொகையைச் செலுத்துவதற்கும், பல்வேறு சமூக நல வீட்டு வசதித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்கும் நிதி ஒதுக்கம் செய்யப்படாததால் 'கடன் செலவுகள்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

பாலங்கள், முகாம்/சாலைகள், ஆணைப்பாடி ஆற்றின் உட்புற நீர்வீழ்ச்சி பகுதியின் அடித்தளம், பல்வேறு பகுதிகளில் உள்ள கால்வாய்கள் ஆகியவற்றுக்கு சிறப்புப் பழுது பார்த்தல் பணிகளை மேற்கொள்ள கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ததாலும், எஞ்சிய வெள்ளப் பழுது பார்த்தல் பணிகளுக்குத் தொகை கொடுத்ததுடன், சில குடியிருப்புகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்துகொடுத்து மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கங்கள் செய்ததாலும், 'பாசனம்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

'ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம்' என்பதன்கீழ் அதிக செலவு ஏற்பட்டதாலும், செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான இறுதிப் பட்டிகளுக்கு தொகைக் கொடுத்ததாலும், பல்வேறு கோட்டங்களில் பொருட்களுக்கு தொகை கொடுத்ததாலும், 'சிறு பணிகள்' என்பதன்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கியதாலும், 'பொதுப் பணிகள்—கட்டடங்கள்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

சென்னை அரசு பொது மருத்துவமனையில், சாதனங்கள், மருந்துகள், உலை எண்ணெய், மருத்துவ ஆக்ஸிஜன் எரி வாயு முதலியவற்றை ஒத்திப்போடாத நிலையில் வாங்கியது தொடர்பான சில உடனடிப் பட்டிகளுக்குத் தொகை கொடுத்ததாலும் 'மருத்துவம்' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது. அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் 1980—81 ஆம் ஆண்டில் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதற்கு முந்தைய ஆண்டுகளில் இருந்ததைவிட மேலும் அதிகரித்துள்ளது. எனவே, மருந்துகள், உணவுச் செலவுகள் முதலிய செலவுகள் கணிசமான அளவுக்கு உயர்ந்தன.

1980-81 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு இம்மன்றம் இசைவளிக்க வேண்டுகிறேன்.